## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தாய்மொழி - தரம் 05 / இரண்டாந் தவணை – முதலாம் வாரம் ( $L_4$ $S_4$ $R_4$ $W_4$ )**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

❖ சகலரும் பொதுவாக அறிந்திருக்க வேண்டியவற்றை அறியத்தருவன **அறிவித்தல்கள்**.
**உ+ம்** – கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை வீச வேண்டாம்.

❖ ஒருவருக்கோ, ஒரு குழுவினருக்கோ அறிவுரை கூறும் பாங்கில் அமைவன **அறிவுறுத்தல்கள்**.
**உ+ம்** – உங்கள் சுட்டெண்ணை இந்த அடைப்புக்குள் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதவும்.

❖ கீழ்வரும் விடயங்களை நன்கு வாசித்து **அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள்** என இனங்கண்டு விடைகோட்டில் எழுதுக.

1). கொரோனா வைரசுத் தொற்று மிகவேகமாக அதிகரிக்கும் அபாயம்! மக்கள் விழிப்புணர்வுடன் செயலாற்றுங்கள். ....................................
2). முதலாந்தவணைப் பரீட்சை பாடசாலை ஆரம்பித்த முதல் வாரம் நடைபெறும்.....................
3). உங்கள் சுட்டெண்ணை இந்த அடைப்புக்குள் உள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக. ................
4). கட்டுரைப் போட்டிக்காகத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் நாளை மு.ப 10.00 மணிக்கு பிரதான மண்டபத்திற்கு வருகை தரவும். ......................................
5). நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்களை போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு இல்லப் பொறுப்பாசிரியர்களைக் கேட்டுக் கொள்கிறோம். ......................................
6). உருக் கோலத்திலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க. ......................................
7). இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இத்தாளிலேயே எழுதுக. ......................................
8). இவ்விடத்தில் குப்பைகளைக் கொட்ட வேண்டாம். ......................................
9). இப்பூங்காவில் உள்ள பூக்களைப் பறிக்காதீர்கள். ......................................
10). வீதியைக் கடக்கும் போது வெள்ளை நிறக் கோடுகள் உள்ள பகுதியினூடாகக் கடந்து செல்லவும். .....................................
11). தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையில் ஐந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். .....................................
12). முழுப் பெயரைத் தனித்தனி எழுத்துக்களில் தரப்பட்ட கூடுகளில் எழுதுக. .........................
13). இடி மின்னல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் கையடக்கத் தொலைப்பேசியை பயன்படுத்த வேண்டாம்.
14). அங்கவீனர்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. ..........................
15). விடுமுறைக் காலத்தில் ஆசிரியர்களினால் வழங்கப்படும் பயிற்சிகளை தவறாது செய்க. ................................